## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

----------------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

----------------------------------------------------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும்

பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு "திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு" என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது. பொது பேரேடு,

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக நடப்பாண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த 477 கட்டிடங்கள், 28,555 எண்ணிக்கையிலான தளபாட உபகரணங்கள் மற்றும் 1,797 எண்ணிக்கையிலான இயந்திர உபகரணங்கள் என்பன தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதன் இழுவுப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் பெறுமதி பூச்சியமான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுத்து அண்ணளவான இழிவுப் பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு அதனைப் பாவனைக்கு எடுப்பதற்காக தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னரே ஆரம்பிக்கின்ற போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 125,492,259 கிரயமான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 திசெம்பர் மாதத்தின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட 57 மோட்டார் வாகனங்களுக்கான மீளாய்வாண்டிற்குரிய ரூபா 29,575,000 தொகையான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது சகல சொத்துக்களும் நியமத்தின் பிரகாரம் சரியாக பெறுமானத்தேய்வு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான பெறுமானத்தேய்வு சீராக்கங்கள் 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படுகின்றது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 11 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை இருப்பாக இனங்காணப்பட வேண்டியவைகளுக்கு உரித்தாக்க முடியாத, மீளாய்வாண்டின் போது கால்நடை உற்பத்தியிலிருந்து ரூபா 4,644,701 தொகையான வருமானம் ஒன்று உழைக்கப்பட்ட மன்றத்தின் பண்ணைகளில் வளர்க்கப்பட்ட ரூபா 2,986,920 கூட்டுத்தொகையான கால்நடை வளங்கள் தொடர்புடைய இருப்பாக இனங்கண்டு நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்ட கால்நடை வள இருப்பு நடைமுறையல்லா சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களும் இருப்புக்களும் தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி என்ற பெறுமதியின் குறைந்த பெறுமதியில் இருப்பு பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக இருப்புக் கிரயத்தில் பெறுமதி இடப்படும் வகையில் இருப்புக் கொள்கை இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தின் போது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு பெறுமதி இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்கீட்டு நியமத்திற் கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிநிலைமைக் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் அரசாங்க மானியம் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்து கிடைத்த மானியமாக ரூபா 5,298,332,712 தொகையான மூலதன மானியம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை ஒழுங்குமுறையான அடிப்படையின் கீழ் வருமானமாக இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் மானியம் மற்றும் வெளிநாட்டிலிருந்து கிடைத்த மானியமாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ள சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வின் பிரகாரம் சொத்துக்களை அகற்றும் போது உரிய திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமதி இந்த உரிமை மூலதனத்தின் கீழ் சீராக்கும் கொள்கையொன்றாகப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரசாங்கத்தின் மானியம் ஒழுங்கு முறையான அடிப்படையின் கீழ் பிற்போட்ட வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 11 பயிற்சி நிலையங்களை நடாத்திச் செல்வதற்காக 1984 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது கையேற்கப்பட்டிருந்த காணி மற்றும் மன்றத்திற்கு சட்ட ரீதியான உரித்து காணப்பட்ட 05 காணிகளின் பெறுமதி மற்றும் மன்றத்திற்குச் சொந்தமான 06 வாகனங்களின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடுசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்தக் காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்குப் பிரிவிற்கு அறிக்கை இடுவதற்காக காணிப்பிரிவு அறிவித்த கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வாகனங்கள் தொடர்பாக எதிர்காலத்தின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மன்றத்திற்கு சட்ட ரீதியான உரித்துக் காணப்பட்ட மற்றும் மன்றத்தினால் பயன்படுத்தப் படுகின்ற வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2016 ஆம் ஆண்டின் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் மீள கையேற்கப்படாமையின் அடிப்படையில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 14,016,500 கூட்டுத்தொகையான 289 மினி லெப்டொப் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கணனி மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதனால் சொத்துக்கள் அப்பெறுமதியினாலும் வருடாந்த பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் என்ற கணக்குகளின் மீதி முறையே ரூபா 2,803,300 இனாலும் ரூபா 8,409,900 இனாலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மன்றத்தின் சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மன்றத்தினால் வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட 02 வாகனங்களுக்காக 2012 நவம்பர் 06 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்குள்ள ரூபா 4,075,000 தொகை கணக்கிடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய இரண்டு வாகனங்களுக்காக அறவிட வேண்டிய பணத்தை செலுத்துமாறு கம்பனிக்கு கடிதம் அனுப்பப்பட்ட போதும் பதிலளித்தல் அல்லது பணம் செலுத்துதல் இடம்பெறவில்லை. | பணத்தை அறவிடுவதற்கு அல்லது வாகனங்களை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 32,065,606 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 13,988,144 தொகையான அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், கிடைத்த நிதியின் பிரகாரம் செலவிடப்பட்டிருந்ததுடன் கையிலுள்ள பட்டியல்கள், நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் திறைசேரி செயலாளரின் BD/CPB/4/1/9/-2018 ஆம் இலக்க மற்றும் 2017.12.27 ஆந் திகதிய 3/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனால் 2017 ஆம் ஆண்டிற்குரிய உறுதிச் சீட்டுக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அட்டுறு எண்ணக்கருவின் அடிப்படையில் செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.5 ஒன்றிணைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 98 சதவீத பங்குகள் உரித்தாகவுள்ள வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி 1981 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், மன்றத்தின் நிதிக்கூற்றுக்களுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணைக்கப்பட்டு ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் நிதித் தகவல்களுடன் மன்றத்தின் நிதித் தகவல்கள் இணைக்கப்பட்டு ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இரண்டு நபர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 600,000 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு மன்றம் தவறியிருந்தது. | உரிய உத்தியோகத்த ரிடமிருந்து மாதாந்தம் அறவிடுவதற்கு இருந்த பணம் தொடர்ச்சியாக அறவிடப்படாமை பற்றி சட்டப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டப் பிரிவின் மூலம் எடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அறவிட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 109,356,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 292,520,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 183,164,000 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு இளைஞர் அபிவிருத்திச் செலவினம் ரூபா 143,492,000 இனால் குறைவடைந்தமை மற்றும் உள்ளக உழைப்பு ரூபா 30,302,000 இனால் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 சனவரி 30 மற்றும் 31 ஆந் திகதிகளின் போது ஐக்கிய அமெரிக்க குடியரசில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக மன்றத்தின் பணிப்பாளர் மற்றும் இளைஞர் பிரதிநிதிகள் இருவருக்காக விமானச்சீட்டு மற்றும் அமையச் செலவினங்களுக்காக ரூபா 1,029,518 கூட்டுமொத்தமாக செலவிடப்பட்டிருந்தது. எனினும் குறித்த காலத்தின் போது வீசா | 2018.01.30 ஆந் திகதி வீசா கிடைத்திருந்ததுடன், நிகழ்ச்சித்திட்டம் 2018.01.30 ஆந் திகதி ஆரம்பித்து 31 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், அதன் பின் தொடர் நடவடிக்கைகள் 2018.02.01 ஆந் திகதியில் நடாத்தப்பட்டதாக அறிந்திருந்தமையால் அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட அழைப்பின் பிரகாரம் இலங்கையின் இளைஞர் விவகாரங்களை | மாநாடு ஆரம்பமாகின்ற தினத்தின் போதே பங்குபற்றச் செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மற்றும் வசதிகள் வழங்கப்பட வேண்டியிருந்த துடன் அரசாங்கத்தின் நிதியை சிக்கனமாக பயன்படுத்துவது தொடர்பில் |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரித்துக் கொள்வதற்கு முடியாமையினால் உரிய மாநாடு முடிவடையும் நாளில் நாட்டிலிருந்து வெளியேறியமையின் காரணமாக செய்யப்பட செலவினம் சிக்கனமற்ற செலவினத்திற்கு உள்ளாகியிருந்தது. | மேற்கொள்கின்ற நிறுவனமான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் பங்குபற்றாதிருப்பின் எதிர்காலத்தில் இலங்கையின் இளைஞர்களுக்கு இவ்வாறானதொரு சந்தர்ப்பம் கிடைக்காது போகின்றமையால் தாமதமாகியேனும் இந்த மூன்று பேரும் உரிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக வெளியே அனுப்பப்பட்டிருந்தனர். | விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சர்வதேச இளைஞர் பரஸ்பர நிகழ்ச்சித்திட்டத்திற்காக புதிய நாடுகளை தொடர்புபடுத்தும் செயற்பாடுகளின் கீழ் சீனாவின் இளைஞர் அமைப்புடன் ஒருநாள் கலந்துரையாடலுக்காக 2018 யூலை 09 ஆந் திகதி முதல் 2018 யூலை 14 ஆந் திகதி வரை 05 நாட்கள் மன்றத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,738,966 தொகை செலவிடப்பட்டு சீனாவிற்கு சுற்றுலா சென்றிருந்த போதிலும், 2019 யூலை 30 ஆந் திகதி வரையிலும் உரிய கலந்துரையாடல்களின் விளைவாக மன்றத்திற்கு பிரதிபலனொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | கலந்துரையாடலின் போது சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரைகள் மற்றும் முன்மொழிவு இடங்கள் கண்டறியப்பட்டதுடன் நிறுவனங்களுக்கிடையே நடாத்தப்படுகின்ற இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொடர்புபடுத்துவதற் குரியதாக இருக்கின்ற சுற்றுலாவின் பின்னர் அந்த நிறுவனத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது செலவிடப்பட்ட முறை தொடர்பாக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையும் உள்ளது. | அந்த கலந்துரையாடல் மூலம் மன்றத்தின் செயலாற்றலை மேம்படுத்துவதற் கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது டன் அரசாங்கத்தின் பணம் ஆக்கபூர்வமான பணிகளுக்காக செலவிடப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் சர்வதேச இளைஞர் தினம் கொண்டாடும் விழாவிற்காக அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி நிதிஏற்பாடு | 2018 இன் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட No Drugs அபி Youth நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2018 youth with talent நிகழ்ச்சித்திட்டம் சர்வதேச இளைஞர் தின | நிகழ்ச்சித் திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாட்டு எல்லையில் செலவினங்களை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 5,000,000 ஆக இருந்த போதிலும், அந்த எல்லையினை விஞ்சி ரூபா 9,602,715 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், ஏனைய இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு அதற்காக பயன்படுத்தப்பட வில்லை. | நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைக்கப்பட்டு, அமுல்படுத்துவதால் செலவினங்களைக் குறைப்பதற்கு முடியுமாக இருந்தது. No Drugs அபி Youth மற்றும் இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம் மூலம் மேலதிக நிதி பெறப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் செய்வதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் யொவுன்புற நிகழ்ச்சித்திட்டத்திற்கான செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 150 மில்லியனாக இருந்த போதிலும், அதற்காக ரூபா 176,578,040 தொகை செலவிடப்பட்டமையின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூபா 26,578,040 இனால் விஞ்சியிருந்தது. | யொவுன்புற 2018 இன் நிகழ்ச்சித்திட்டம் ரூபா 150 மில்லியன் தொகையில் 7000 இளைஞர் யுவதிகளின் பங்குபற்றலுடன் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், மேலதிகமாக 250 கூடாரங்களை வெளி நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கும், சுகாதார வசதிகள், குழாய் நீர் வசதிகளுக்காக மின்சார சபை மற்றும் நீர் வழங்கல், நீர்வடிகாலமைப்புச் சபை போன்ற அரசாங்க நிறுவனங்களுக்கு மில்லயன் கணக்கான பணத்தைச் செலுத்துவதற்கு ஏற்பட்டமையும், பங்குபற்றுகின்றவர்களுக்கு ரீ-சேர்ட், தொப்பி மற்றும் குவளை போன்ற நினைவுச் சின்னங்களை கையளிப்பதற்கும் மேலதிக பணத்தைச் செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் செலவினங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் இளைஞர் அமைப்புக்களைத் தாபித்தல் மற்றும் இளைஞர் சுக நலன்களுக்காக தற்போது அமைக்கப்பட்டுள்ள அமைப்புக்களுக்கு ஒத்துழைப்பை வழங்குதல், இளைஞர் அமைப்புக்களைத் தாபித்து அவற்றைப் பதிவுசெய்து கொள்ளல், அந்த | மன்றத்தின் மன்ற பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்திற்கு உதவி மானியமாக ரூபா 3,050,000 தொகை வழங்கி அந்த தொகையிலிருந்து 09 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. யொவுன்புறயிற்குரிய பணிகள் இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்தினால் | மன்றத்தின் சட்டங்களுக்கும் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் களுக்கும் இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அமைப்புக்களுக்கு ஆலோசனை வழங்குதல், தொழில்நுட்ப அறிவை வழங்குதல், மற்றும் பணமாக உதவிகளை வழங்குதல் என்பன காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டில் சர்வதேச இளைஞர் தினத்தை கொண்டாடும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய 09 வேலை விடயங்களை நிறைவேற்றுவதற்கும் யொவுன்புற நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேனீர் உபசரிப்புக்களுக்காக இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்திற்கு முறையே ரூபா 3,050,000 தொகை மற்றும் ரூபா 3,219,500 தொகைகள் வழங்கப்பட்டிருந்தன. | நிறைவேற்றுவதற்கு கோரப்பட்டிருந்ததாகவும் அதனை மிகவும் பொறுப்புடனும், உரிய பிரகாரமும் நிறைவேற்ற வேண்டி இருந்தமையால் அது தொடர்பாக அனுபவமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு அந்த பணிகள் மன்றத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | |
| மேலும், இந்தப் பணிகள் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாமல் இலங்கை இளைஞர் சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய செலவினங்களை பரீட்சிப்பதற்காக அதற்குரிய கோவைகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய கோவைகளை விரைவாக சமர்ப்பிக்குமாறு இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

## 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி முறையே ரூபா 73,007,519 தொகை மற்றும் ரூபா 68,903,239 தொகையான திருகோணமலை லவ்லேன் பயிற்சி நிலையம் மற்றும் தம்புள்ளை சுவிஸ் பயிற்சி நிலையம் என்பவற்றை நவீனமயப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் வேலைகளுக்குரிய முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த | 02 செயற்திட்டங்களினதும் மிகுதி வேலைகளை பூர்த்திசெய்வதற்குத் தேவையான சகல திட்டங்களும், பொறியியலாளர் மதிப்பீடும் மதியுரை நிறுவனத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. திறன் சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களிலிருந்து 2019 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ள நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமையினால் மேலதிக நிதியேற்பாடு கோரப்பட்டிருந்ததுடன், பாதீட்டில் இருந்து தேசிய இளைஞர் | பெறப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி செயற் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் தாமதங்களைத் தவிர்த்து பயிற்சி நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை குறித்துரைத்த பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட போதிலும், 2019 யூலை 31 வரை அந்த ஒப்பந்தகாரரை கறுப்புப்பட்டியலில் இடல் தொடர்பாக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் மிகுதி வேலை பகுதிகளை பூர்த்தி செய்வதற்காக 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் வேறொரு ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | சேவைகள் மன்றத்திற்கு கிடைக்கின்ற நிதியேற்பாட்டைப் பரீட்சித்து இரண்டு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்தது. கறுப்பு பட்டியலில் இடுதல் தொடர்பாக வரிசை அமைச்சின் செயலாளருக்கு எதிர்காலத்தில் அறிவிக்கப்படும். | |
| (ஆ) | பெல்வூட் சவுந்தர்ய விடுதியை நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய நிர்மாண வேலையின் கட்டம் I மற்றும் கட்டம் II முறையே 2018 நவம்பர் 02 மற்றும் 2019 மார்ச் 31 ஆந் திகதிகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதன் செயல் முன்னேற்றம் முறையே 60 சதவீதம் மற்றும் 8 சதவீதம் என்ற கீழ் மட்டத்தில் காணப்பட்டன. | பெல்வூட் கட்டம் I ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் பணிகள் மிகவும் மெதுவாக நிறைவேற்றப்படுகின்றது. சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களில் ரூபா 1,395,210 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. திருப்திகரமான செயல்முன்னேற்றம் காணப்படாமையினால் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் வேலைத் தளத்தை தடை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>கட்டம் II ஒப்பந்தம் மிகவும் மெதுவாக நிறைவேற்றப்படுவதுடன் இது தொடர்பாக ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் | 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிர்மாணங்கள் செயல் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு |

ரூபா 100 மில்லியனுக்கும் 200 மில்லியனுக்கும் இடையிலான பெறுமதி உடைய ஒப்பந்தங்கள் அமைச்சின் பெறுகை சபையின் அங்கீகாரத்தின் கீழ் இடம்பெற வேண்டியிருந்த போதிலும், பெல்வூட் சவுந்தர்ய விடுதியை நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய நிர்மாணங்ள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படைக்குப் புறம்பான கட்டம் I மற்றும் கட்டம் II ஆக முறையே ரூபா 99.66 மில்லியன் மற்றும் ரூபா 97.79 மில்லியன் என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது திணைக்களப் பெறுகை சபையின் அங்கீகாரத்தின் கீழ் ஒரு ஒப்பந்தக்காரருக்கே கையளிக்கப்பட்டிருந்தது.

மேலும், கட்டம் II இன் கீழான புதிய கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன் கட்டம் I இன் கீழான பழைய கட்டிடம் உடைத்து அகற்றப்படும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், கட்டம் I இன் ஒப்பந்தக்காலம் முடிவடைவதற்கு 10 மாதங்களுக்கு முன்னர் அதாவது வேலை ஆரம்பிப்பதற்குத் தேவையான அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படாதிருக்கும் போது கட்டம் II இற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு முற்பணமாக ரூபா 22,491,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

நடவடிக்கைத் திட்டத்தில் இந்த செயற்திட்டத்திற்காக வரையறுக்கப்பட்ட நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் அளவிற்கு ஈடாகும் வகையில் கட்டம் I ஆக ஒப்பந்தம் வழங்கல் 2017 யூலையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2017 ஆம் ஆண்டின் இறுதிவரையில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரிய 07 செயற்திட்டங்கள் நிறைவேற்றப் படாமையினால் கிடைத்த நிதஏற்பாட்டை உச்ச பயன்பாட்டிற்கு எடுக்கும் நோக்கத்துடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ''அரசாங்கத்தின் பெறுகை பணியை துரிப்படுத்தல்'' அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தப்பட்டு பெல்வூட் கட்டம் II ஒப்பந்தம் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது.

பெல்வூட் சவுந்தர்ய விடுதி அபிவிருத்திக்குரிய நிர்மாண நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் கட்டம் I ஒப்பந்தம் 2017.08.03 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018.11.02 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டும். கட்டம் II ஒப்பந்தம் 2018.01.05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019.04.25 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் கட்டம் I கட்டிடம் உடைத்து அகற்றும் நடவடிக்கைகள் 2017 செப்தெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 சனவரி மாதம் கட்டம் II இற்குரிய ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் குறித்துரைத்த காலத்தில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு உரிய மேற்பார்வையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 09 மாதம் முதல் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 14 உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர்களும், ஒரு முகாமைத்துவ உதவி (தொழில்நுட்ப ரீதியற்ற) உத்தியோகத்தரும் அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். அதில் 11 பேர்களுக்கு ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகள் காணப்படவில்லை. | மன்றத்தின் தேவையின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக அமைச்சிடம் ஆலோசனை கோரப்பட்ட போதும், ஆலோசனை கிடைக்கப் பெறாமையினால் கிடைக்கின்ற ஆலோசனையின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் தகைமையின் பிரகாரம் உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட “நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030” இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் தமது விடயப்பரப்பிற்கு கொண்டுவருகின்ற நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்கை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை சமர்ப்பிக்கப் படவில்லை. | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய NP/SP/SDG/17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |